CC. No.294/2025

நாள் :-27.01.2026

அ.சா.2 :- ஆர். சங்கர், த/பெ.ராமச்சந்திரன்

<u>(1 முதல் 3 எதிரிகள் ஆஜர், ).</u>

<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு முன்னிலையானார். சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.</u>

<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :-</u>

பொறுப்பை ஒப்படைக்கும்போது நகைக்கடன்கள் மற்றும் விவசாய கடன்களில் உள்ள நகைகளை களமேலாளர் மற்றும் உதவி களமேலாளர் முன்னிலையில் தான் ஒப்படைக்கவேண்டும் என்று சொன்னால் சரிதான். ரொக்க இருப்பு தொகையை மத்திய கூட்டுறவு வங்கி மேலாளர் முன்னிலையில் ஒப்படைக்கவேண்டும் என்று சொன்னால் சரிதான். களமேலாளரோ மற்றும் உதவிகளமேலாளரோ, மத்திய கூட்டுறவு வங்கி மேலாளரோ சங்கத்தில் இருந்துக்கொண்டு எதிரிகளை அழைத்தார்களா என்றால் அழைத்தார்கள். எந்த தேதியில் அழைத்தார்கள் என்றால் எனக்கு நினைவில் இல்லை. எதிரிகளுக்கு ஏதேனும் அறிவிப்பு கொடுத்தார்களா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. நான் மேற்படி சங்கத்தில் நகைகள் மற்றும் இருப்பு தொகைகளை தலைவர் முன்னிலையில் பெற்றுக்கொண்டேன். மேற்படி விபரத்தை நான் 81 விசாரணை அதிகாரியிடமோ காவல் அதிகாரியிடமோ தெரிவிக்கவில்லை. களமேலாளரோ மற்றும் உதவிகளமேலாளரோ, மத்திய கூட்டுறவு வங்கி மேலாளரோ சங்கத்திற்கு வரவில்லை அதனால் தான் தேதியை என்னால் குறிப்பிட்டு சொல்லமுடியவில்லை என்றால் சரியல்ல. நான் 81 விசாரணை அதிகாரியிடம்கொடுத்த அ.த.சா.4 ஆவணத்தில் தேதி, மாதம், வருடம் திருத்தப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். என் கையெழுத்தின் கீழ் தேதி எதுவும் குறிப்பிடவில்லை. பொதுவாக சங்கத்தின் செயலாளர் தேதி குறிப்பிடாமல் கையொப்பம் ஈட முடியாது என்றால் சரிதான். அவ்வாறு தேதி குறிப்பிடாமல் இந்த அ.த.சா.4 ஆவணத்தை கொடுத்தற்கு காரணம் என் உயர்அதிகாரிகள் கேட்டுக்கொண்டதற்கினங்க எந்த ஆவணம் பின்னிட்டு தயாரிக்கப்பட்டது என்றால் சரியல்ல. என்னுடைய காலக்கட்டத்தில் அனைத்து பொறுப்புகளும் சரியான முறையில் ஒப்படைக்கப்பட்டன என்று

CJM, MAYILADUTHURAI.

சொன்னால் சரியல்ல. அவ்வாறு ஒப்படைக்கப்பட்டதால்தான் என்னால் செயலாளராக தொடர்ந்து செயல்பட முடிந்தது என்று சொன்னால் அதற்கும் நான் செயல்பட்டதற்கும் எந்த சம்மந்தமும் இல்லை.

(2ம் எதிரியின் வழக்கறிஞர் மேற்கூறிய குறுக்கு விசாரணையை அவ்வாறே ஏற்றுக்கொண்டார்.)

<u>மறு விசாரணை :-</u>

இல்லை.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்து காண்பித்து அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.

தலைமை குற்றவியல் நீதிபதி,
மயிலாடுதுறை.

CJM, MAYILADUTHURAI.